# அருப்புக் கோட்டையில் ஹிந்தி கண்டனக் கூட்டம்.

## தோழர் ஸ்டாலின் ஜெகதீசுக்குப் பாராட்டு

(ஒரு நிருபர்)

அருப்புக்கோட்டை, ஜுன், 1.

இந்நகர் தியாகராய வாலிப சங்கத்தின் சார்பாக ஹிந்தி கண்டனக் கூட்டம் 31-5-38 ந்தேதி நெசவு தொழிலாளர் ஐக்கிய சங்கத்தலைவர் ஜனாப் செயி மூ. செயினு மரைக்காயர் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் வீர. சு. பு. வீரய்யா, விருதுநகர் சுப்ரமணியம், உத்தண்டன், வழிகாட்டி ஆசிரியர் புன்னைமுத்து, எஸ். எஸ். பழனிச்சாமி, ராமய்யா பிள்ளை, ஆகியவர்கள் தோழர் ஸ்டாலின் ஜெகதீஸ் உண்ணா விரதத்தைப் பாராட்டியும், ஹிந்தியைக் கண்டித்தும், ஹிந்திப் போருக்குத் தமிழ் மக்களின் உதவி அவசியம் என்றும் விரிவாகப் பேசினார்கள்.